
# வடகலையும் தென்கலையும்





D.A.ஜோசப்

www.dajoseph.com E-mail : deyeje@yahoo.com

# வடகலையும் தென்கலையும்

by

**D. A. ஜோசப்**

Website : www.dajoseph.com Phone : 0413 - 2210187

முக்குணத்தில் முற்குணத்தோன் என்றான் கம்பன். யாரை? நம்முடைய பெருமாளை! அவர் குணம் சத்வகுணம். ராஜஸத்தையும், தாமஸத்தையும் கீழ்ப்படுத்தி மேலோங்கி கம்பீரமாய் நிற்பது சாத்வீகக் குணம். இந்த குணம் இருந்தால் பொறுமை இருக்கும். மன்னிக்கும் அருள் உள்ளம் இருக்கும். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இருக்கும். அதனால்தான் ராமன் சிம்மாசனத்தைத் தம்பிக்கு விட்டுக்கொடுத்தான். தன் அவதாரங்களில் எல்லாம் பகவான் பொறுத்துப்போகும் குணம் உள்ளவனாகவே – அருளாளப்பெருமாளாகவே – இருந்திருக்கிறான்.

சிசுபாலன் பலமுறை மன்னிக்கப்பபட்டதும், காகாசுரன் உயிர்ப்பிச்சை பெற்றதும், இன்றுபோய் யுத்தத்துக்கு நாளைவர ராவணன் அனுமதி பெற்றதும், பகவானால் சம்ஹாரம் பண்ணப்பட்ட அசுரர்கள் எல்லாம் நற்கதி பெற்றதும் இந்தக் காரணத்தினால்தான். ‘ஏசினார் உய்ந்து போனார்’ என்றல்லவா பெருமாளுக்குப் பெருமை? ஆனால் அவன் அடியார்களுக்கு இன்று அந்தக் குணம் இருக்கிறதா? விஷ்ணுவின் தாஸர்கள் என்று பொருள் உள்ள “வைஷ்ணவர்கள்”என்ற சொல்லே தமக்குப் பீடுதரும் பதவியாக ஏற்றுக்கொண்டுள்ளவர்கள் அந்த விஷ்ணுவின் சாந்த குணத்தை எவ்வளவு தூரம் கைக்கொள்ளுகிறார்கள்? நெற்றியில் உள்ள திருமண் காப்புக்கு மூக்குவரை தனியே நீட்சி இருக்கிறதா நீட்சி இல்லையா என்பதைப் பொறுத்து வைணவர்களுக்குள்ளே உறவு நிச்சயிக்கப்படுகிறது. வைணவக்கலை ஒரு மனவளக்கலை. இதில் வடக்கென்றும் தெற்கென்றும் ஏன் போர்க்கலை? உலகத்தில் வைராக்யமும், ஆன்மீகத்தில் வளர் அன்பும், அகம் அழிந்து பணிதலும் வைணவத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்.

ஸ்ரீவைகுண்டத்திலே திருமகள் அந்தஸ்தென்ன என்பதைப் பற்றியும், உடலை உகுத்தபின்பு திருப்பாணாழ்வாரும், பெரியாழ்வாரும் சமமாகிவிடுகிறார்களா என்பதைப் பற்றியும் யாருக்கு ப்ரத்யட்சமாகத் தெரியும்? சில வேதாந்தக் கோட்பாடுகளில் சில பெரிய தலைகள் மோதிக்கொண்டால் அது வைணவத்தின் அடிப்படை தர்மங்களை வேறுக்காரணமாயிருக்க நியாயமில்லை. வைணவன் என்பவன் யார்? விஷ்ணுவின் மேல் அன்பும் அனைத்து உயிர்களிடமும் அஹிம்சைக் கோட்பாடும் மோட்சமடைவதில் துடிப்பும் உள்ளவன்தான் வைணவன். இவை எல்லாவற்றுக்கும் மேலாக சக வைணவர்கள் மீது பக்தி கொள்வது மேலான வைணவ இலக்கணம்.

பாகவத அபச்சாரத்தை பகவான் சகித்துக்கொள்ள மாட்டான். சரித்திரங்கள் நமக்கு இந்த உண்மையைப் பல வகையாக உணர்த்துகின்றன. சாண்டிலினியை குறைவாக எண்ணிய கருடன் என்ன ஆனான்? இலக்குவனைத் தகாத வார்த்தை பேசிய சீதை இலங்கையில் என்ன பாடுபட்டாள்? சீதையிடம் அபச்சாரப்பட்ட ராவணனுடைய பத்துத்தலைகள் எங்கே போயின? பிரஹலாதனைத் துன்புறுத்திய இரணியனுடைய உடல் என்ன ஆயிற்று? பாணன் மீது கல் எறிந்த லோகசாரங்கர் கதை என்ன? திரௌபதியை துகில் உரிந்த கௌரவரின் ஆட்சிக்கொடி என்னாயிற்று? பகவான் அவதாரம் எடுத்ததெல்லாம் பாகவதர்களைக் காப்பதற்காக! பகவத் அபச்சாரத்தை மன்னித்தவன் பாகவத அபச்சாரத்தை எண்ணிக்கொதிப்பான். அம்பரீசனிடம் அபச்சாரப்பட்டு உலகெல்லாம் ஓடித்திரிந்த துர்வாசரை அவருடைய தபோபலம் காக்கவில்லையே!

இப்படி இருக்க வடக்குக்கலை தெற்குக்கலை என்று பரஸ்பரம் தூஷிக்கும் நக்கலை நாரணன் எவ்வளவு காலம் பொறுத்துக்கொள்ளுவான்? வடகலையார் தென்கலையாருக்குத் தீங்கு செய்தாலும், தென்கலையார் வடகலை யாருக்குத் தீங்கு செய்தாலும் இரண்டுமே பாகவத அபச்சாரம் தானே! அந்த பாவத்துக்கு இவர்கள் எப்படி பதில் சொல்லப்போகிறார்கள்? இவர்கள் நரகத்தில் விழுந்துவேகும்போது எந்தத் தலைவர்கள் பெயரைச் சொல்லிக்கொண்டு இந்த பாகவத அபச்சாரத்தில் ஈடுபட்டார்களோ அந்தத் தலைவர்களே அவர்களைக்காக்க முடியாமல் போய்விடுமே.

ஊன்றிப்பார்த்தால் இருகலைக்கும் உள்ள பேதங்களெல்லாம் மிக உயர்ந்த கோட்பாடுகளின் மட்டத்தில்தான் இருக்கின்றன. அப்படிச் சொல்லப்படும் ஏறக்குறைய 25 வேறுபாடுகளில் ஒன்றுகூட பாகவத அபச்சாரத்தை அங்கீகரித்தாகத் தெரியவில்லை. அப்படியிருக்கும்போது அரசியில் கட்சிப்பூசல் போலே, கேட்கச்சகிக்காத விஷமப் பேச்சுகளும் சில இடங்களில் நடைபெறும் வன்முறைச் செயல்களும் இது வைணவம் தானா என்று நம்மை மலைக்க வைக்கின்றன. இந்தச் சம்பவங்களைப் பார்த்துக் கொண்டு ஸ்வாமி ராமானுஜரும் ஸ்வாமி தேசிகளும் குருதிக் கண்ணீர் வடிப்பதைத் தவிர வேறென்ன செய்வார்கள்? இந்தப் பூலோகத்தாரின் விஷமச் செய்கைகள் அந்த இருவரும் கற்பித்த பாடம் அல்லவே! அவர்கள் இப்படிச் செய்யச் சொன்னார்கள் என்று எந்த சாத்திரத்திலே எழுதி உள்ளது?

எந்த மதத்திலும் அடிமட்ட நிலை என்றும் மேல் நிலைப்பக்குவம் என்றும் இரண்டு நிலைகள் உண்டு. மேல்நிலைப்பக்குவம் என்ற ஞான சித்தியை அடைந்த பிறகு வெறும் தர்க்கரீதியாக பேசித்தீர்க்க வேண்டிய ஒரு ஆரோக்யமான பட்டிமன்றத்தலைப்புகளைக் காரணமாகச் சொல்லிக்கொண்டு அடிமட்ட நிலை கூடத்தாண்டாத ஆரம்ப கட்ட வைணவர்கள் அடித்துக் கொள்வது நியாயமா? இப்படிச் சண்டையிடுகிறவர்களில் அநேகருக்கு தென்கலைக்கும் வடகலைக்கும் உள்ள கொள்கை வேறுபாடுகள் என்ன என்பதே சரியாகத் தெரியாது என்பதுதான் இதில் உள்ள மாபெரும் நகைக்சுவை!

முட்டிக் கொள்ளும் ஆடுகளுக்கும், மோதிக்கொள்ளுமாடுகளுக்கும், கடித்துக்கொள்ளும் நாய்களுக்கும் மேம்பட்டவன் மனிதன். அதை உணர்த்துவதுதான் ஆன்மீகம், மாக்களை மக்களாக்கி மனிதனை தெய்வமாக்கும் சமயத்துறையில் நுழைந்த பிறகு அதுவும் வைணவம் என்ற தெய்வீக அந்தஸ்தை அடைந்த பிறகும் இந்த கிழ்நிலைக்குணங்கள் தேவையா ?

---

Article Published on : Friday, August 14, 2009

© All Rights Reserved

For more details contact : D.A. Joseph,
No.18, Fourth Cross, Rainbow Nagar, Pondicherry, SOUTH INDIA.
Website : www.dajoseph.com E-mail : deyeje@yahoo.com Ph : +91 - 0413 - 2210187